திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்ற தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்களுடன் ஆலோசனை கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது

| தொகுதி | இடம் | நேரம் /தேதி |
|---|---|---|
| திருத்தணி சட்டமன்றத் தொகுதி | திருத்தணி நகரத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் | காலை 10. மணி அளவில் 02.05.2026 சனிக்கிழமை |
| திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி | திருவள்ளூர் சீவி நாயுடு சாலை கேஎஃப்சி கட்டிடத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் | பகல் 12.மணி அளவில் 02.05.2026 சனிக்கிழமை |

சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்கள் தொகுதி பார்வையாளர்கள் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்

**பொருள்:** மே 4 தேதி அன்று 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன்**
செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட
தி.மு.க.

சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை

# சமூகநீதி அடிப்படையில் உடனடியாக நியமனம் செய்க!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஏப். 29 - பாலினப் பிரதிநிதித்துவம் என்றாலும் அதில் சமூகநீதி அவசியம்! சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதி பணியிடங்களை சமூகநீதி அடிப்படையில் உடனடியாக நியமனம் செய்க! மக்கள் மன்றத்தைப் போராட்டத்துக்குத் தள்ளக் கூடாது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தொடக்கக் காலம் முதலே சென்னை உயர்நீதிமன்றம், இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று உயர்நீதிமன்றங்களில் ஒன்று (Charted High Courts).

அதன் நீதிபதிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டு இன்று மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75 ஆக (தலைமை நீதிபதி உள்பட) இருக்கிறது.

ஆனால், தற்போது 75 இல் 23 நீதிபதி பதவிகள் (விரைவில் ஒருவர் ஓய்வு உள்பட 24 ஆகக்கூடும்) நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன.

**“தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி!”**

தேங்கியுள்ள வழக்குகளும், அன்றாடம் போடப்படும் வழக்குகளும் கூடுதலாகவே பெருகும் நிலையில், “தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி” என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

சென்னை மட்டுமல்லாது, இது போன்ற பல உயர்நீதிமன்றங்களில் ஏராளமான நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமலேயே உள்ளன!

நமது இடைவிடாத வெகு நீண்ட கால போராட்டங்கள் காரணமாக, உச்சநீதிமன்றத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு, சமூகநீதிக் கொள்கையை அதிகாரப்பூர்வமாக ‘கொலிஜியம்’ ஏற்று, அதன்படி காலியான உச்சநீதிமன்ற நீதிபதி பதவியில், சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர், உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்று, நியமிக்கப்பட்டு சிறப்பாகப் பணி புரிந்து வருகிறார்!

**ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தொடர்பு!**

பற்பல நேரங்களில், ‘கொலிஜியம்’ என்ற பதவி நியமனப் பரிந்துரைக் குழு அனுப்பிய பட்டியலைக் கூட - உடனடியாக ஒன்றிய அரசின் சட்டத் துறை மூலம் நியமிக்காது, தங்களது காவிக் கண்ணோட்டப்படி, குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளரா அல்லது அதன் கார்டு ஹோல்டரா? அல்லது முன்பு அவருக்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தொடர்பு உள்ளதா? என்று பார்த்து, அதன் பிறகே நியமன ஒப்புதல் தருகிறார்கள் என்பது, பரவலாகப் பேசப்படும் செய்தியாகும்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் ‘கொலிஜியம்’ என்ற நியமனக் குழுவில் ‘சீனியர்’ என்ற போர்வையில் பெரிதும் உயர்நீதிமன்றப் பார்ப்பன நீதிபதிகள் இடம் பெற்று, உச்சநீதிமன்றத்திற்குப் பரிந்துரை செய்கின்றனர். (மூன்று பெயர்களைக் கொண்ட கொலிஜியம்)

‘சீனியாரிட்டிபடி’ உயர்நீதிமன்ற கொலிஜியத்தில் இடம்பெறுபவர் பார்ப்பனரல்லாதவராக வர வாய்ப்பிருந்தாலோ அல்லது தங்கள் கண்ணோட்டத்தில் உகந்தவராக இல்லை என்று கண்டறிந்தாலோ, அவர்களை வேறு மாநிலங்களுக்குப் ‘பதவி உயர்வு’ மூலம் (Kicking up) தள்ளிவிட்டு விட்டு, தங்களது பார்வையில் விரும்பத் தக்கவர்களையே நிய மிக்கும் ஒரு நடைமுறை ஏற்படுகிறது.

இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. அதை விலாவாரியாக விளக்க நாம் விரும்பவில்லை.

அதுபோக, ஒவ்வொரு முறை பட்டியலை அனுப்பும்போதும், ஒவ்வொரு உயர்ஜாதி - பார்ப்பன ஆண் அல்லது பெண் வழக்குரைஞர்களது பெயர்களைச் சேர்த்து, கொஞ்சம் கொஞ்சமாக (அலுப்பு இன்றி) தமிழ்நாட்டில் வெறும் 3, 4 சதவிகிதமே உள்ள ஒரு வகுப்பிலிருந்து, 10, 12 சதவிகிதம் பிரதிநிதித்துவமும், 80, 90 சதவிகிதம் உள்ள எஸ்.சி., எஸ்.டி., எம்.பி.சி., பி.சி., மைனாரிட்டி வகுப்புகளில் போதிய அனுபவம், வருமான வரி கட்டுவோராகவும், பல திறமைகள் இருந்தாலும், அவர்களுக்கு வாய்ப்புக் கதவு அடைபட்டே இருப்பதுதான் யதார்த்த நிலையாகும்!

அப்படி ஏதாவது ஒரு பார்ப்பனரல்லாதோரைப் பரிந்துரை செய்தால்கூட, அதிகம் வயதானவராகவும், விரைவில் அப்பதவியில் இருந்து ஓய்வு பெறத் தக்கவராகவும் பரிந்துரைக்கிறார்கள்! அதேநேரத்தில், உயர்ஜாதியிலிருந்து பரிந்துரை மூலம் நியமனம் பெறுபவர்கள் குறைந்த வயதுடையவர்களாகவும், உச்சநீதிமன்றத்திற்குச் சென்று அங்கும் உயர் நிலை பெறும் வகையிலான வாய்ப்பை உறுதி செய்யும் நோக்கத்துடனும் பரிந்துரைகளும், நியமனங்களும் ‘தொலைநோக்கோடு’ நடத்தப்படும் வேதனையான நிலையே வழமையாக உள்ளது!

வழக்குரைஞர் சங்கத்தவர்கள் கையெழுத்திட்ட மனு ஒன்றைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப முடிவெடுத்துள்ளனர். அதனைக் காலதாமதமின்றி அனுப்பவேண்டும்!

**நியமன வாய்ப்பை வழங்க வேண்டும்!**

காலியாக உள்ள 23, 24 நீதிபதி பதவிகளில் நியமனம் செய்யும்போது, நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமூகநீதிக்கான போதுமான பிரதிநிதித்துவம் (Adequate Representation) என்ற நியதிக்கேற்ப, வாய்ப்பற்ற பல வகுப்பினருக்கு நியமன வாய்ப்பை வழங்கவேண்டும்.

தமிழ்நாடு, சமூகநீதி மனப்பாங்குள்ள (Psychology Soil) - அதில் முன்னோடியாக நின்று போராடும் ஒரு மாநிலம் என்பதை பரிந்துரைப்போரும், நியமனம் செய்வோரும் கருத்தில் கொள்ளத் தவறக்கூடாது.

பாலின பிரதிநிதித்துவும் (Gender Justice) என்ற சாக்கில், உயர்ஜாதிப் பெண்களையே நியமனம் செய்யும் தந்திரத்தையும் மாற்றிக் கொள்ளவேண்டும்!

புதிய தலைமை நீதிபதியும், கொலிஜியமும், அதன் மேல் உள்ள உச்சநீதிமன்றக் கொலிஜியமும், அதற்கு மேல் இறுதியாக நியமனம் செய்யும் ஒன்றிய அரசின் சட்டத் துறை, குடியரசுத் தலைவர் உள்பட அனைவரும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி எடுத்த உறுதிமொழியிலிருந்து நழுவாமல் கடமையாற்றுவது அவசரம், அவசியம்!

**நமது முக்கிய விழைவு!**


மக்கள் மன்றத்தை நீதித் துறைக்கு எதிராகப் போராடும் நிலைக்கு அவர்கள் தள்ளிவிடக் கூடாது என்பதே நமது முக்கிய விழைவு - வேண்டுகோள் ஆகும்!

இதனை அலட்சியப்படுத்தினால் தொடர் மக்கள் கிளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# பல்லடம் - திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பூர், ஏப். 29 - பல்லடம் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் கூறியதாவது :

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் பல்லடம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் களத்தில் நின்ற போது, என்னுடன் உணர்வோடு பயணித்து, தொடர்ந்து பிரச்சாரம் செய்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அனைத்துக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற கழக உடன்பிறப்புகளுக்கும், ஆதரவு தெரிவித்து வாக்களித்த அனைத்து நல்வுள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ந. தினேஷ்குமாருக்கு “உதய சூரியன்” சின்னத்தில் வாக்களிக்க உழைத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகளுக்கும், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு. கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம் - காங்கேயம் - தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் பணியாற்றிய கழக கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

## திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், ஏப். 29 - திருப்பூர் கிழக்கு மாவட்டம் காங்கேயம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல த்தலைவர் இல.பத்மநாபன் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

இது குறித்து திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : திருப்பூர் கிழக்கு மாவட்டம் காங்கேயம் தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கழக வேட்பாளர்களாக “உதய சூரியன்” சின்னத்தில் போட்டியிட்ட கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ. சாமிநாதன் (காங் கேயம்) மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர். தி.இந்திராணி (தாராபுரம்) ஆகியோருக்காக திராவிட முன்னேற்ற கழக நிர்வா கிகள், மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனை வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற சாதனை களை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத்துக்கூறி கண் துஞ்சாது தேர்தல் பணி மேற் கொண்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ஆந்திர பண்ணை விவசாயிகள் டீசல் இன்றி அவதி!

அமராவதி, ஏப். 29 – ஆந்திரப் பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு மற்றும் இயந்திரங்கள் மூலம் பயிர் அறுவடை செய்வதால் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. பெட்ரோல் டீசல் விநியோகத்திலும் அங்கு கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடல் மற்றும் ஆற்றுப் பகுதியில் இறால் மற்றும் மீன் குட்டைகளில் அதிக ஜெனரேட்டர் களைப் பயன்படுத்தி வருகின்றனர்.


இந்தச் சூழ்நிலை காரணமாக ஆந்திராவை ஒட்டி யுள்ள புதுச்சேரி பிராந்தியமான ஏனாமில் பெட்ரோல் மற்றும் டீசல் வாங்க வருவதால் உள்ளூர் மக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெட்ரோல் நிலையங்களில் கூட்டம் அலைமோதுகிறது. கேன்களை வரிசையில் வைத்து நுகர்வோர் காத்திருக்கின்றனர். பெட்ரோல் நிலையங்களில் காவல்துறை முன்னிலையில் எரிபொருள் விநியோகம் நடத்த ஏனாம் நிர்வாகம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏனாம் காவல் கண்காணிப்பாளர் வரதராஜன் மேற்பார்வையில் மக்களுக்கு தடையின்றி எரிபொருள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. எண்ணெய் நிறுவனங்களிடம் இருந்து வரும் விநியோகத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக, கடந்த சில நாட்களாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

# வில்லிவாக்கம் முன்னாள் 98 (ஆ) வட்டக் கழகச் செயலாளர் காஞ்சி செ.துரை மறைவு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – அ.வெற்றிஅழகன் - கார்த்திக் மோகன் - வே.வாசு - டி.வி.செம்மொழி அஞ்சலி!



சென்னை, ஏப். 29 - சென்னை கிழக்கு மாவட்டம், வில்லி வாக்கம் கிழக்கு பகுதி, முன்னாள் 98 (ஆ) வட்டக் கழகச் செயலாளரும், 96 வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினருமான காஞ்சி செ.துரை (வயது 59) அவர்கள் உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் (27.04.2026 - திங்கட்கிழமை) அதிகாலை 4.30 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வில்லி வாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லி வாக்கம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கார்த்திக் மோகன், கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் வே. வாசு, தலைமை பொதுக் குழு உறுப்பினர் டி.வி. செம்மொழி எம்.சி, மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மரியாதை செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (28.04.2026 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில், சென்னை, அயனாவரம், கே.கே.நகர், 7 வது தெரு, நெ.16-ல் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நியூ ஆவடி ரோடு வேலங்காடு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# வேளச்சேரி - பரங்கிமலை மின்சார ரயில் சேவைக்கு அமோக வரவேற்பு!

சென்னை, ஏப். 29 – வேளச்சேரி – பரங்கிமலை இடையே பறக்கும் மின்சார ரயில் சேவை தொடங்கி 42 நாட்களை கடந்த நிலையில், நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது நாள் தோறும் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இத்தடத்தில் உள்ள புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையின் பொது போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது புறநகர் மின்சார ரயில் சேவை. சென்ட்ரல், கடற்கரை நிலை யங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதில் கடற்கரை வேளச்சேரி இடையே இயக்கப்படும் பறக்கும் ரயில் வழித்தடத்தில் தினசரி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இதற்கிடையே, சென்னை கடற்கரை – வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தின் விரிவாக்கமாக, வேளச்சேரி – பரங்கிமலை திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 17 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த மார்ச் 14ம் தேதி ரயில் சேவை தொடங்கியது.

இந்த வழித்தடம் மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், வேளச்சேரி உட்பட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பேருதவியாக உள்ளது. இத்தடத்தில் ஆரம்பத்தில் தினசரி 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் பயணித்தனர்.

இது படிப்படியாக அதிகரித்து, தற்போது தினசரி 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். பரங்கிமலை ரயில் நிலையம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாகத் திகழ்வதால் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து மக்கள் மத்தியில் பெருத்த வரவேற்பை பெற்றுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. அரங்கண்ணல்
ஏப்ரல் 29 (1999)



பள்ளிநாட்கள் தொட்டு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உற்ற தோழராக திகழ்ந்தவர். கலைஞர் அவர்களால் பொதுவாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்.

தந்தை பெரியாரின் ‘குடியரசு’ பத்திரிகையில் பணியாற்றினார். பின்னர், ‘அறப்போர்’ என்ற பெயரில் வார இதழ் நடத்தினார். இதையடுத்து அண்ணாவின் ‘திராவிட நாடு’ பத்திரிகையில் பணியாற்றினார்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டும், கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் தலைவராகவும் சிறப்புற பணியாற்றினார்.

கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு, தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.